ARUNA
FILMS

அருணா பிலிம்ஸ்

தூக்கு தூக்கி

நடிகர்கள்:

o

சிவாஜி கணேசன்	....	சுந்தராங்கதன் (தூக்கு தூக்கி)
டி. எஸ். பாலையா	....	சேட்டு நம்மக்ராம்
ஆர். பாலசுப்ரமணியம்	....	மங்களபுரி அரசன்
பி. பி. ரங்காச்சாரி	....	சுவர்ணபுரி அரசன்
ஜி. முத்துகிருஷ்ணன்	....	மதிவாணன்
டி. என். சிவதாணு	....	சித்ரன்
எஸ். எஸ். சிவசூரியன்	....	விசித்ரன்
யதார்த்தம் பொன்னுசாமிபிள்ளை	....	உபாத்தியாயர்
வெங்கட்ராமன்	....	சட்டாம்பிள்ளை (கட்டழகன்)
வெங்கடாசலம்	....	சுந்தரபுரி அரசன்
ராமையா	....	மதனன்
லூஸ் ஆறுமுகம்	....	தூக்குதூக்கி
தக்ஷிணாமூர்த்தி	....	லக்ஷ்மண்
ராமராஜ்	....	பண்டிதர்
வீராசாமி	....	பண்டிதர்
பி. கல்யாணம்	....	சுந்தரபுரி அமைச்சர்
வி. பி. எஸ். மணி	....	மங்களபுரி அமைச்சர்
கன்னையா	....	சிப்பாய்
வில்லன் நடராஜன்	....	சிப்பாய்
ஷண்முகம்	....	சிப்பாய்

நடிகைகள்:

லலிதா	....	சுந்தராங்கதன் மனைவி, ப்ரேமா
பத்மினி	....	ராஜகுமாரி, மாதவி
ராகினி	....	மந்திரிகுமாரி, மல்லிகா
சி. கே. சரஸ்வதி	....	சுந்தரபுரி அரசி
எம். எஸ். எஸ். பாக்கியம்	....	பெருந்தேவி
செல்லம்	....	குண சுந்தரி
வேணுபாய்	....	மங்களபுரி அரசி

வசனம்:	ஏ. டி. கே. & வி. என். சம்மந்தம்.
சங்கீதம்:	G. ராமனாதன்.
டைரக்ஷன்:	ஆர். எம் கிருஷ்ணசாமி
ஸ்டுடியோ:	பிலிம் சென்டர் & ரேவதி

தூக்கு தூக்கி

கதைச் சுருக்கம்:

1. கொண்டுவந்தால் தந்தை!
2. கொண்டுவந்தாலும், வராவிட்டாலும் தாய்!
3. சீர் கொண்டுவந்தால் சகோதரி!
4. கொலையும் செய்வாள் பத்தினி!
5. உயிர் காப்பான் தோழன்!

என்னும் ஐந்து வாக்கியங்களின் உண்மை விளக்கமே இந்தக் கதை.

சுந்தரபுரி அரசன் நாட்டின் செல்வநிலையை ,உயர்த்த தேசாந்தரம் சென்றுவருமாறு தன் புதல்வர்களான சித்திரன், விசித்திரன், சுந்தரன் என்னும் மூவருக்கும் கட்டளை இடுகிறான். பொறாமை காரணமாக மூத்தவர்கள் இருவரும் இளையவனை விட்டுப் பிரிந்து செல்கின்றனர்.

வழியில் சுந்தரன் மேலே குறிக்கப்பட்டுள்ள ஐந்து வாக்கியங்களையும் அறிந்து அவற்றை தன் வாழ்க்கையில் பொய்யென நிரூபித்துக் காட்டாவிட்டால் வீரன் மகனல்ல என சபதம்கூறித் தந்தையிடம் திரும்புகிறான். வெறுங்கையோடு வந்த மகனை வெறுத்துத் தந்தை சுந்தரனை நாடுகடத்துகிறான். இதனால் முதல் வாக்கியம் மெய்யென நிரூபணமாகிறது.

தன் மகனுக்கு நேர்ந்த தீங்கை எண்ணி தாய் ஆற்றொணாத் துயரடைகிறாள், எனவே இரண்டாவது வாக்கியமும் உண்மையாகிறது.

தாயைச் சமாதானம் செய்துவிட்டு சுந்தரன் தன் தங்கை குணவைப் பார்க்கச் செல்லுகிறான். சீரில்லாமல் வந்தமையால் சகோதரனை உதாசீனம் செய்து அவமதிக்கிறாள் தங்கை. அவள் செய்கை மூன்றும் வாக்கியத்தையும் மெய்ப்படுத்துகிறது.

அங்கிருந்து சுந்தரன் தன் மனைவி ப்ரேமாவைக் காணச் செல்கிறன். அவள் சேட்டோடு கள்ளக் காதல் நடத்துகிறள். இது சுந்தரன் நண்பனை மதிவாணனுக்குத் தெரியும். அவனுக்குத் தெரியும் என்பது ப்ரேமாவுக்கும் தெரியும். எனவே மதிவாணனல் எங்கு தன் மர்மம் வெளியாய் விடுமோ என்று பயந்து, மதிவாணன் தன்னைக் கற்பழிக்க முயல்வதாகத் தன் கணவனிடம் பழிகூறுகிறள்.

அன்று மாலை மதிவாணன் சுந்தராங்கதனைச் சந்தித்து, ப்ரேமாவை உடனே அழைத்துச் செல்லுமாறு கூறுகிறன். சுந்தரன் மதிவாணன் நடத்தையில் சந்தேகித்து அவன்மேல் குற்றம் சாட்டுகிறன். மனமுடைந்த மதிவாணன் ப்ரேமா சேட்டுடன் கள்ளக் காதல் நடத்துவதை கூறுகிறன். இதனல் அவர்கள் நட்பில் பிளவேற்பட்டு இருவரும் பிரிக்கப்படுகின்றனர்.

சுந்தராங்கதனல் எதையும் ஊர்ஜிதப்படுத்த இயலவில்லை. எனவே மாறுவேடமணிந்து, சேட்டின் வேலையாளாகச் சேர்ந்து உண்மையை அறிகிறன் சுந்தராங்கதன். இவன் கட்டிக்கொடுத்த அபூர்வமான பீடாவை சேட்டு ப்ரேமாவுக்குக்கொடுக்க, அந்த பீடாவால் சேட்டின் வேலையாள் தன் கணவனென அறிந்து ப்ரேமா அவனைக் கொல்ல ஏற்பாடு செய்கிறள். அச் சமயம் ப்ரேமாவைப் பழிவாங்க சுந்தராங்கதன் கோபத்தோடு உள்ளே வருகிறன். அவனைக் கண்ட ப்ரேமா பயந்து, ஓடி ஒளிந்து கொள்கிறள். சேட் நன்ருகப் புடைக்கப்படுகிறன். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று சேட்டு ஓடிப் போகிறன். இதற்கிடையில் சுந்தராங்கதன் அரண்மனைச் சேவகர்களிடமிருந்து தப்பி கோட்டையைவிட்டு வெளியேறுகிறன்.

ப்ரேமா தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, தன் கணவன்மேல் அரசனிடம் அபாண்டமான வீண்பழி கூறுகிறள். சுந்தராங்கதன் அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று, தன்னையும் அரசரையும் கொல்லச் சதிசெய்ததாகவும், அதனின்றும் தப்பவே தான் ஒளிந்துகொண்டதாகவும் சமாதானமுறைக்கிறள். அரசன் தன் மகள் வார்த்தையை நம்பி சுந்தராங்கதனைப்பிடித்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானமளிக்கப்படுமென்று பறைசாற்றுகிறன்.

சுந்தரன் கதி இப்படி இருக்க, சித்திரன், விசித்திரன் இருவரும் தங்கள் முட்டாள் தனத்தால், பல கஷ்டங்களுக்குள்ளாகி பரிதவிக்கும்போது இந்தப்பிரகடனம் அவர்கள் காதில் விழுகிறது இதைக்கேட்டதும் தங்களில் ஒருவனைச் சுந்தராங்கதனுய்க்காட்டி பரிசைப்பெற திட்டம்போட்டு இருவரும் சிறைப்படுகின்றனர்.

சுந்தரன் அயல் நாடு சென்று, அங்கு பைத்தியம்போல் நடித்து, அவ்வூர் அரசகுமாரி மந்திரிகுமாரி ஆகிய இருவருக்கும் ஏடு தூக்கும், தூக்குத் தூக்கியாக வேலையில் அமர்கிறுன். அவ்விருவரையும் மணக்கச் சட்டாம் பிள்ளை செய்யும் சூழ்ச்சியை அறிந்து அதை அவன் தந்தைக்கு வெளிப்படுத்திவிடுகிறுன்.

அன்றிரவு அரசகுமாரியும் மந்திரிகுமாரியும், சட்டாம்பிள்ளையைத் திருமணம் செய்துக்கொள்வதற்குக் காளிகோயிலில் சந்திப்பதாக ஏற்பாடு நடக்கிறது. இதை அறிந்த உபாத்தியாயரான தந்தை தன் மகனை ஒரு அறைக்குள் பூட்டிவைத்துவிட்டு அரசனுக்கு விஷயத்தைத் தெரிவித்து விடுகிறுர்.

அரசகுமாரி, மந்திரிகுமாரி இவர்களின் வருகைக்காக சுந்தராங்கதன் காளிகோயிலில் காத்திருக்கிறுன். அவர்கள் வந்ததும் கேலி செய்து முகத்திரையை நீக்கியவுடன், இருவரும் சேடிகள் எனத் தெரிகிறது. மறைந்திருந்து இவைகளை கவனித்த அரசகுமாரி மாதவி, மந்திரிகுமாரி மல்லிகா, ஆகிய இருவரும் வெளிப்பட்டு சுந்தராங்கதனேடு வாதாடுகின்றனர். அச்சமயம் அங்கு வந்த அரசன், பைத்திய சுந்தராங்கதன்தெளிவாகப் பேசுவதைக் கண்டு, சந்தேகங்கொண்டு, உண்மையை உரைக்கும்படி வற்புறுத்துகிறுன். உண்மையை உணர்ந்த அரசன், ஏற்கனவே இவன்மேல் ராஜத்ரோகக் குற்றம் இருப்பதால் கைது செய்து சுவர்ணபுரிக்கு அனுப்பிவிடுகிறுன். சுந்தராங்கதனைக் காதலிக்கும் மாதவி எவ்வளவு மன்றுடியும் பயனில்லை.

சுந்தராங்கதனை சுவர்ணபுரி அரச சபையில் விசாரணை செய்கிறுர்கள். மற்றவை வெள்ளித் திரையில் காண்க.

சுபம், சுபம், சுபம்.

பாட்டு எண். **1.**

இயற்றியது: **அ. மருதகாசி**
பாடியவர்: **ராஜேஸ்வரி**

இன்ப நிலைகாண இன்னும் ஏன் தாமதம்? வா (இ)
எந்தன் மனக் கோயில் தனில் வாழும் மதனா, நீ வா (இ)
அன்போடு காதல் பண்பாட வா
அலை மோதும் உள்ளம் நிலை கொள்ள வா
பெண் பேதை துன்பங் கண்டும் பிடிவாதமா?
பிரியாமல் கண்ணும் கண்ணும் உறவாடவா (இ)

தொகையரு

விண்ணிலே விளையாடும் நிலவு போல
என்னுடன் இனிதாக விளையாடவா
கண்ணிலே விளையாடும் பருவ காலக்
கனவெல்லாம் நனவாகத் துணையாக வா வா வா

பாட்டு

வண்டாடும் ரோஜா மலர் சூடவா
மனம் போல வாழ்வில் சுகம் தேடவா (இ)
கண் டோரைக் கொள்ளை கொள்ளும் கண்ணா நீ வா
கணம்கூடத் தாளேன் நெஞ்சம் இனிமேலே நான்

பாட்டு எண் **2.**

இயற்றியது: **அ. மருதகாசி**
பாடியவர்: **சௌந்தரராஜன், ராஜேஸ்வரி.**

சுந்தரன்: கண்வழி புகுந்து கருத்தினில் கலந்த
மின் ஒளியே ஏன் மௌனம்?
வே றெதிலே உந்தன் கவனம்?

ப்ரேமா: இன் மொழி பேசி ஏய்த்திட எண்ணும்
இதய மில்லாதார் கவனம்
இழந்ததனால் இந்த மௌனம்

சுந்தரன்: வண்ணச் சிலையே வளர் பிறையே
வந்த தறியேன் மனக்குறையேன்?

ப்ரேமா: எண்ணம் வேம்பு, மொழி கரும்பு,
எனைப் பிரிந்த உம் மனம் இரும்பு

சுந்தரன்: கண்ணே போதும் சொல்லம்பு
உனைக்-கணமும் பிரியேன் எனை நம்பு

ப்ரேமா: உண்மையில் என்மேல் உமக்கன்பு
உண்டென்றால் இல்லை இனி வம்பு

சுந்தரன்: கண்ணில் தவழுதே குறும்பு
கனி மொழியே நீ எனை விரும்பு

இருவரும்; கண்வழி புகுந்து கருத்தினில் கலந்து
கனிவுறும் காதல் ஜோதி
காண் போமே பாதி பாதி

பாட்டு எண் **3.**

இயற்றியது: உடுமலை நாராயண கவி
பாடியவர்: செல்லமுத்து, ராஜேஸ்வரி

கஜல்

சேட்டு: ப்யாரி நிம்மள் மேலே நம்கி மஜா
நம்மள் மேலே நிம்கி மஜா
பூரி மசால் போலே உல்கம் மேலே
ஹம்தோனே மில்கயா — ஜல்ஸா

பாட்டு

ப்யாரி நிம்மள் மேலே நம்கி மஜா — மேரா
ப்யாரி நம்மள் மேலே நிம்கி மஜா — ஜல்ஸா
நாம்கே வாஸ்தே நஹி ப்ரேம்கி மீறி
சேட்ஜி பண்ருன் குஷி — மேரே ப்யாரி

தொகையரு

ப்ரேமா: செந்தமிழில் இந்தியதைச் சேர்த்துக் கலந்து நித்தம்
சுந்தரமாய்ப் பேசுகின்ற சொல்லழகா

சேட்டு: பகுத்குஷ்

ப்ரேமா: தங்கக்கட்டுப்பல்லழகா-வஹ்வா-ஜவ்வாதுப் பொட்டழகா
- ப்யாரி
மங்கையெனை மயக்கவந்த கட்டழகா... அழகா... அழகா

சேட்டு: அச்சா... அச்சா

பாட்டு

ப்ரேமா: வடக்கிருந்து தெற்கே வந்த சேட்டே - உம்மை
மன்னன் மகள் நான் மறக்கமாட்டேன் - என்னை
மாலையிட்டு ... ... - இந்த
மானிலந்தனில் வாழ்வெனுஞ் சுக
மேன்மைகண்டிட, காதல்கொண்டனை
மாலையிட்டுத் தாலிகட்டி மணந்த மணாளன்
அன்பை மறந்தே
இன்பம் அடைந்தேன் ... ... (வடக்கே)

சேட்டு: பொம்பளக்கி என்ன ஓணும் போலோ

ப்ரேமா: பொன்னும் பொருள்யாவும் உனைவிட மேலோ

சேட்டு: பொம்பாய் மேலே அபிநம்பள் போரு
ப்ரேமா: போனுலோ எப்போ வாருர் - சேட்ஜி

வசனநடை

சேட்டு; அரே அரே என்னுத்கி
மன்சு புண்ணுக்குருன்
இன்கி போரு நாள்கி வாரு
சேட்ஜி உன்கி குலாம்

ப்ரேமா: ஐயே இது என்னுங்க சே
அப்படிச் சொல்லாதீங்க சலாம்

சேட்டு: ஹா

ப்ரேமா: ஊம் ... ... (ஜல்சா ப்யாரி)

பாட்டு எண் 4. புடவைப் பாட்டு.

இயற்றியவர்: உடுமலை நாராயண கவி
பாடியவர்: சௌந்தரராஜன்

ஆணும் பெண்ணை அழகு செய்வது
ஆடை ஆடை மேலாடை ஆடை
அடுத்தவர் பார்த்து ஆசைப்படுவதும்
ஆடை ஆடை பட்டாடை ஆடை
மானங்காப்பதும் மதிப்புக் கொடுப்பதும்
புடவே புடவே — வேட்டி
புடவே புடவே — இதை
வாங்கி உடுத்திப் பரீக்ஷைபாரு ஒரு
தடவே தடவே ... ... (ஆணும்

இதைப்பார்த்தீங்களா?

பாட்டு

பப்ளப்பளா பள பள பள
பளீரெங்குதுபார் — புடவே — பளீரெங்குதுபார் - இதைப்
பாட்டிகட்டின குமரிபோலே
நோட்டங்காட்டும் பார் — புடவே — நோட்டங்காட்டும் பார்
தப்பூதப்புண்ணு போட்டடிச்சா
சுருங்கிப்போகாது — சரிகை — சுருங்கிப்போகாது
தண்ணியை விட்டுச் சாயம் வெளியே
தாண்டிப் போகாது — சாயம் — தாண்டிப் போகாது
இப்பொழுது இந்த ரகத்தில்
ஒண்ணே ஒண்ணுதா — இருப்பது — ஒண்ணே ஒண்ணுதா

இதை - எளிய விலைக்கு விடப்போகிறேன்
வேணுமின்னுதா — உங்களை — வேணுமிண்ணுதா
இதைப்பாத்தீங்களா?

பாட்டு

நாட்டியமாடுகின்ற நட்சேத்திரங்களெல்லாம்
நாஜோக்காப்போட்டுக்கொள்ளும் அங்கி-சரிகைஅங்கி-வெகு
நாளைக்குப் போகாது கசங்கி — இது

மாட்டுத்தோலைப் போலிருக்கும்
மூட்டுப் போட்டுக்கட்டு கின்ற
முகம்மதியர்க் கேற்ற லுங்கி

இந்நேரமெல்லாம் விட்டது பெரிசு
இப்பொவிடப்போரது சிரிசு

மூக்குப்பொடி போடுகின்ற
மூளையுள்ள ஆளுங்களுக்கு
முக்கியமாய் வேணுமிந்தக் கைக்குட்டை
கைக்குட்டை கைக்குட்டை — இது
மூணுபணம் ஜோடியொண்ணு

வேணுமின்னு வாங்கிக்கோங்கோ
மூட்டை கட்டப்போறே இனிமே உடமாட்டேன் — ஏலம்
உடமாட்டேன்......உடமாட்டேன்......உடமாட்டேன்.

பாட்டு எண். **5**

இயற்றியவர்: **உடுமலை நாராயண கவி**

பாடியவர்: **சௌந்தரராஜன்**

தொகையரு

கண்டால் கொல்லும் விஷமாம்
கட்டழகு மங்கையரை......நான்

கொண்டாடித் திரியாமல்
குருடாவ தெக்காலம்

பெண்களை நம்பாதே......கண்களே
பெண்களை நம்பாதே......வீண்
பெருமை காட்டிச் சிறுமையாக்கும் (பெண்களை)

மண்கலம் போல மற்றவர் தொட்டால்
மாசுறும் பெண்மை......என்று
பேசிடும் உண்மை .....கெட்டு
வெண்கலம் போல யெவர் தொட்டாலும்
விளக்கி எடுத்து விரும்பும் தன்மை (பெண்களை)

தொகையரு

ஒய்யாரக் கொண்டையிலே தாழம் பூவாம்......அதன்
உள்ளே இருக்கிறது ஈறும் பேனும்......இதை
மெய்யா யுணர்ந்தவனே புத்திமானும்
மேல்மினுக்கும் பெண்டுகளைப் பார்த்திடானும்

பாட்டு

கண்டவரோடு கண்ணால் பேசிக்
காமுறும் மாது......இந்த
பூமியின் மீது......கொண்ட
கணவன் தன்னைக் கழுத்தறுப்பாள்
காரிகை ரூபத்தில் காணும் பிசாசுப் (பெண்களை)

ஜரிகைப்பட்டு ஜவ்வாதுப் பொட்டு
தங்க நகைப் பகட்டு......வெள்ளித்
தாம்பாளம் தனில் தாம்பூலம் முதல்
தேங்கா பழந்துட்டு......கொண்டு
தெருவில் புறப்பட்டுப்
பிறர் மதித்திட வருவாள்......தெய்வப்
பேரால் எதையும் புரிவாள்......தன்னைப்
பெண்டாய்க் கொண்டால் திண்டாட்டந்தான்
பிலுக்கி யலுக்கிக் குலுக்கிச் சிரிக்கும் (பெண்களை)

பாட்டு எண். 6

இயற்றியவர்: அ. மருதகாசி
பாடியவர்: சௌந்தரராஜன் & லீலா, கோமளா

பூஜை பாட்டு

சுந்தரி சவுந்தரி நிரந்தரியே
சூலியெனும் உமையே குமரியே (சுந்தரி)

அந்தமும் ஆதியும் இல்லா ஜோதியே
அமரியெனும் மாயே
பகவதியே
அருள் புரி வாயே
பைரவித் தாயே
உன் பாதம் சரணமே (சுந்தரி)

சீலமும் வீரமும் சீரும் செல்வமும்
தேர்ந்த கலை ஞானம்
தானம் தியானம்
மாதரின் மானம்
காத்திட வேணும்
கண்காணும் தெய்வமே (சுந்தரி)

பாட்டு எண். 7

இயற்றியவர்: உடுமலை நாராயண கவி
பாடியவர்: சௌந்தரராஜன், V. N. சுந்தரம்
லீலா, கோமளா

பல்லவி

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்
கொம்பேறித் தாவும்
குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்

அநுபல்லவி

உருண்டையான உலகின் மீது
உயர்ந்தோர் சொன்ன உண்மை யீது
உருவ அமைப்பைக் காணும் போது
ஓரறி வீரறி வுயிரென மாறி மாறி வாலில்லாத (குர)

சரணம்

பிடித்தபிடி விடாமலே சிலர்
பேசும் பேச்சாலும்......தலையில்
பேனுமீரும் தேடித் தேடிப் பிடிப்பதனாலும்
நடிப்பினாலும் நடத்தையாலும்
நரர்களும் வானரமும் ஓர் குலம்
உடுக்கும் உடைகள் படிப்பினாலும்
உள்ளபடிபேதமுண்டு உண்மையில்வித்யாசமில்லை(குர)

பாட்டு எண். 8

பாடியவர்: வசந்தகுமாரி & லீலா

வாரண மாயிரம் சூழ வலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றானென்று
பூரணப் பொற் கும்பக் கலசங்கள் வைத்து
தோரணங் கட்டக்-கனாக் கண்டேன் தோழி.

பாட்டு எண். 9

இயற்றியவர்: தஞ்சை ராமைய்யதாஸ்
பாடியவர்: சௌந்தரராஜன்

அபாய அறிவிப்பு — ஐயா
அபாய அறிவிப்பு — வாத்தியார் ஐயா
நான் மெய்யாகச் சொல்லுவதைப்
பொய்யாக எண்ணாதே — (அபாய)
ஆழந்தெரியாமக் காலை விட்டான் — நம்ம
அரசாங்கத்தையே எதுத்துக்கிட்டான்

காலந் தெரியாமக் கில்லாடிப் பய — ஒரு
கல்லாலே ரெண்டு காய் அடிச்சிப்புட்டான் (—அபாய)

ஜாடையாகவே மாதவி மல்லிகா
சட்டாம் பிள்ளை வலையில் விழுந்தாச்சி — தூக்கு
மேடையில் ஏறி ஊஞ்சலாடவே
சுக்கிரதிசையும் அடுச்சிடுச்சி
சுக்கிர திசையும் அடிச்சிடுச்சி — (அபாய)

கண்ணாலே பாடம் சொல்லிக் கொடுத்துக்
கணக்குப் பண்ணிட்டான் ...டொய்...டொய்...டொய்
காளி கோயிலுக்கு ரெண்டையும் வரச்சொல்லி
கம்பி நீட்டவே ......டொய்.........டொய்.........டொய்
கம்பன் மகனை அம்பிகாபதி
கதையை போலவே ......டொய்......டொய்......டொய்
காதலாலே பலியாகவே போரான்
கவலைப்படாதே ...... டொய் ...... டொய் ...... டொய்
கண்ணீர் விடாதே...டொய்...டொய்...டொய் (அபாய)

பாட்டு எண்: **10**

இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்

பாடியவர்: சௌந்தரராஜன்

தொகையரு

ஏருத மலை தனிலே......வெகு
ஜோரான கௌதாரி ரெண்டு
தாராளமா இங்கே வந்து
ததிங்ணதோம் தாளம் போடுதையா

பாட்டு

கல்லான உங்கள் மனம்
கரைஞ்சி நின்று ஏங்கையிலே
கண் கண்ட காளியம்மா......உங்களை
கருணை செய்வதெக்காலம்
தாம் திமி திமி தந்தக் கோனாரே
தீம் திமி திமி திந்தக் கோனாரே
ஆனந்தக் கோனாரே
அறிவு கெட்டுப் போனாரே
செக்கச் செவேரெனச் செம்மறி ஆடுகள்
சிங்காரமாக நடை நடந்து
வக்கணை யாகவே பேசிக்கொண்டு......பலி
வாங்கும் பூசாரியை நம்புதடா
சோலை வனங்கள் தழைச்சிருக்க......அதை

சொந்தமாய் திங்கும் சுகமிருக்க......இந்த
பாலே வனத்தையே நம்பி வந்து
பழி வாங்கும் பூசாரியைத் தேடுதடா......
தாம் திமி திமி தந்தக் கோனரே
தீம் திமி திமி திந்தக் கோனரே
ஆனந்தக் கோனரே
அறிவு கெட்டுத்தான் போனரே.

பாட்டு எண் **11.**

இயற்றியவர்: **தஞ்சை ராமையதாஸ்**

பாடியவர்: **சௌந்தரராஜன்.**

தொகையரு

சட்டாம் 'பிள்ளையை ஜாடை காட்டி
வரச்சொல்லி விட்டு
முட்டாள் தனமாக் காளி கோயில் முன்னே
வந்து நிற்க லாமா.........உங்கள்
மூளையைத் தான் அடகு வைக்கலாமா
வாங்க வாங்க வாங்க

பாட்டு

பூங்காவின் ரீங்கார வண்டுகளா
புத்தி கெட்டுப் போன அசல் மண்டுகளா......நீங்க
தூங்காமலே கனவு கண்டிங்களா......இப்படி
ஜோடியாகவே வந்த தெண்டங்களா.
முழுக்க நனைஞ்சபின்னே பின்னே
முக்காடு வேணுமா
அலுக்கிக் குலுக்கிக் கொண்டு
அக்காளுந் தானுமா
டிக்கானு போடும் இளம் வெட்டுகளா......நீங்க
தெரிஞ்சியும் இப்படி மதி கெட்டிங்களா
உட்டாலகிரி சட்டாம் பிள்ளையை
நம்பி மோசம் போனீங்களா
பட்டாப் போடும் மயக்கத்திலே
பகுத்தறிவே விட்டிங்களா......இந்த
பராசக்தி மனசு வச்சா
பாதாள மெல்லாம்......கிடு கிடு கிடு
பூங்காவின் ரீங்கார வண்டுகளா......நீங்க
புத்தி கெட்டுப் போன அசல் மண்டுகளா
வாங்க வாங்க வாங்க

—